கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

அ.வ.எண்.711/2023

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் | விவசாயம் |
| த/பெ | வீரப்பகவுண்டர் | கிராமம் | கோவிந்தாபுரம் |
| வயது | 64 | தாலுகா | தாராபுரம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் பிரதிவாதி என்ன தொழில் செய்து வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஆரோ வாட்டர் தொழில் செய்தார். வாடகை கார் டிரைவர் ஆகவும் வேலை செய்து வந்தார். பிரதிவாதிக்கு ஒரு குழந்தை உள்ளது அதன் பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதி மேற்படி ஆவணம் எழுதப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரையில் எந்தெந்த ஊரில் என்னென்ன காரணத்திற்காக வசித்து வருகிறார் என்பது குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல தெரியும். குட்டியாகவுண்டம்பாளையத்தில் இருந்தார். ஒட்டன்சத்திரம் ரோடு சின்னிய கவுண்டன் வலசில் குடியிருந்தார். மேற்படி ஊரில் பிரதிவாதி வசித்து வந்ததாக கூறுவது தவறு என்றாலும் வேறு சில ஊர்களில் அவர் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ஆரோ வாட்டர் வியாபாரம் மற்றும் டிரைவராக வேலை செய்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

**2.** வா.சா.ஆ.1 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் தரப்பினர்களால் கையொப்பம் செய்யப்படவில்லை என்று சொன்னால் ஆதார் அட்டை கொண்டு வராததால் அங்கு கையொப்பம் செய்யவில்லை. வாதி, பிரதிவாதி மற்றும் சாட்சி ஆகியோர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் காளிமுத்து அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். நான் கூறுவது தவறு என்றாலும் பிரதிவாதி அப்போது கையெழுத்து

செய்யவில்லை என்றாலும் அவரது கையெழுத்தை நாங்களே போட்டுக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த சொத்து டிடிசிபி அப்ரூவல் பெற்றதா என்பது குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல தெரியும். அது அப்ரூவல் பெற்ற சொத்தாகும். பிரதிவாதிக்கு கொடுப்பதற்காக என்னுடைய மருமகனிடம் ரூபாய் 6,67,750/–யை வாங்கியதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்ததாகவும் கிரைய ஒப்பந்த தொகையை பெற்றதாகவும் அவர் கிரயம் செய்ய ஒப்புக் கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்த சாட்சிகள் இருவரையும் பிரதிவாதி தான் கூட்டி வந்தார். பிரதிவாதி சாட்சிகளை கூட்டி வரவில்லை என்றாலும் கையெழுத்தும் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 எழுதப்பட்ட காலத்தில் மேற்படி ஆவணத்தின் சாட்சியான குமாரசாமி, பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண் 260/2021 என்ற வழக்கை தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்ததால் இந்த கிரைய ஒப்பந்தத்தில் அவர் சாட்சியாக கையெழுத்திட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல மேற்படி வழக்கு குறித்து எனக்கு தெரியாது. மேற்படி குமாரசாமி மேற்படி வழக்கு குறித்து என்னிடம்சொல்லவில்லை. நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.08.18 19:33:29 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.